கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.40/2019 வா.சா.1 ஓம்பிரகாஷ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தடம் எனக்கு சொந்தமானது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தடம் கிராம நத்தத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் வீடாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 2003 ல் கிரையம் பெற்றேன். நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் பாலசுப்பிரமணியம், அன்னபூரணி ஆகியோரது வாரிசிடம் கிரையம் பெற்றேன். என் வீட்டின் புல எண். 419/9 என்றால் வரைபடம் பார்த்தால் தான் தெரியும்.

2) நான் என் சொத்தின் தாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என் சொத்தின் தாய் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரும் வழக்கு நத்தம் சந்தின் புல எண் என்ன என்றால் 419/7 ஆகும். வழக்கு நத்தம் சந்தின் வருவாய் ஆவணங்கள் என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு நத்தம் சந்து குறித்து எழுதப்பட்ட உரிமைமூல ஆவணங்கள் என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை.

3) கிராம புல வரைபடத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிராம புல வரைபடத்தை நான் தாக்கல் செய்யாமல் செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நத்தம் சந்தின் அகலம் 4 மீட்டர் நீளம் 10 மீட்டர்

என்றால் சரிதான். வழக்கு நத்தம் சந்தினை நானும் , பிரதிவாதிகளும் புல எண். 419/5 , 419/6 சொத்து உரிமையாளர்களும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கு நத்தம் சந்து வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் வருவாய் துறையை வழக்கில் கட்சி சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

4) நான் வாங்கிய பழைய வீட்டை இடித்து தற்போது புது தார்சு வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சந்தினை மறித்து நான் கேட் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல . ஆரம்பம் முதலே அப்படி தான் இருந்தது. அவ்வாறு எனில் அந்த கேட் - ஐ யார் அமைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வாங்கும் போதே அப்படி தான் இருந்தது.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி